| சாட்சி : PW 1<br>வேணுகோபால் | அ.வ.எண். 316/20 | 27.03.2024 |
|---|---|---|

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

3) எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தவறு என்பதை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் கிரையம் பெற்று சில நாட்களில் தெரிந்து கொண்டேன். சில நாட்கள் என்பது ஒரு மாதமா என்றால் சரியாக நியாபகம் இல்லை. சுப்ரமணியன் எனக்கு கிரையம் செய்து கொடுத்த பிறகு 16 ஆண்டுகள் வரை உயிருடன் இருந்தார் என்றாலும் அவர் உயிருடன் இருக்கும் காலத்தில் கிரைய ஆவணத்தில் சர்வே எண் தவறாக இருப்பதை பொறுத்து ஏதேனும் நான் கேட்டேனா என்றால் அப்போது கிரைய ஆவணத்தில் தவறு இருப்பது எனக்கு தெரியவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் தவறு நடந்ததை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் சமீப காலத்தில் தான் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் வா.சா.ஆ.2 பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டா கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நடேசன் உடையார் மகன் நல்லுசாமி, தர்மலிங்கம் மகன் பாலசுப்ரமணியன், பொன்னுசாமி உடையார் மகன் சுப்ரமணியன் மற்றும் நாராயணசாமி உடையார் மகன் வேணுகோபால் ஆகியோர்கள் பெயர் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களையோ அல்லது அவர்களது வாரிசுகளையோ இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்களுக்கும் எங்களுக்கும் சம்ந்தமில்லை அதனால் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சுப்ரமணியன் தாவா சொத்தை பூர்வீக சொத்து என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

4) மேற்படி சுப்ரமணியனுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்பததை பொறுத்து ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி சுப்ரமணியனுக்கு ராஜலிங்கம் என்ற சகோதரர் தற்போது வரை உள்ளார் என்றால் சரிதான். மேற்படி ராஜலிங்கத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், ராஜலிங்கம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் அதனை பொறுத்து எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை. ராஜலிங்கம் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன், அதற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்படி பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு விற்பனை செய்த சுப்ரமணியனுக்கு மட்டும் தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதை பொறுத்து ஆவணம் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்த பொறுத்து எனக்கு பட்டா வழங்கும் போது கூட்டுப்பட்டாவில் உள்ளவர்களை அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். நான்கெல்லையின் அடிப்படையில் தான் எனக்கு பட்டா வழங்கினார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ளிட்ட சொத்துக்களை பொறுத்து கூட்டுப்பட்டாதாரர்களிடையே பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்பதை பொறுத்து ஆவணம் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை, கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தார். பாகப்பிரிவினை ஏற்படாத சொத்தை பொறுத்து சுப்ரமணியனிடமிருந்து

கிரைய ஆவணம் எழுதிப்பெற்றது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கப்படாத சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் மேற்படி சொத்தை கிரையம் பெற்றதில் இருந்து 12 ஆண்டுக்குள் மற்ற பட்டாதாரர்களிடம் பாகம் கேட்டு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. 2016 ம் ஆண்டிற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலாவதிதோசத்தால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. 12 ஆண்டுக்குள் வழக்கு தாக்கல் செய்யாத காரணத்தினால் தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வேஎண் 490/A2 என்று கண்டுள்ளது என்றாலும் வா.சா.ஆ.2 பட்டாவில் சர்வே எண்.490/B15 என்று கண்டுள்ளது என்றாலும், நான் மேற்படி 2 ஆவணத்தில் எதன் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் வா.சா.ஆ.2 பட்டா படி உரிமைகோருகிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் பரிகாரம் கேட்கவில்லைஎன்றால் வா.சா.ஆ.1 நான்கெல்லையின்படி பரிகாரம் கோருகிறேன். தவறான சொத்தை கிரையம் பெற்றதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அலவலகத்தில் ஆவணங்களை பார்த்தால் தாவா சொத்தை பொறுத்து பட்டாவை எனது பெயர் குறிப்பிடவில்லை என்ற விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. தாவா 1வது அட்டவணை சொத்தில் 3ம் பிரதிவாதி எப்போது எவ்வளவு விஸ்தீரணத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியாது, ஆனால் எனது சொத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் தனது

அறிக்கையில் நான் 3ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் இடத்தில் மேற்படி இராமலிங்கத்தின் சொத்தும் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது, எனது பாதைக்கு தெற்கில் தான் ராமலிங்கம் இடம் உள்ளது. நான் ராமலிங்கத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

6) மேற்படி ராமலிங்கத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குரையில் சரியான சொத்து விபரம் குறிப்பிடாத காரணத்தினால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணும் விஸ்தீரணமும் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை பொறுத்து பிழை திருத்தம் செய்ய கேட்டு தனியாக 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த வழககும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 2வது அட்டவணை சொத்தை பொறுத்து என்னையும் உரிமையாளராக சேர்க்கவேண்டும் என்று கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விஸ்தீரணமும், வா.சா.ஆ.2 பட்டாவில் உள்ள விஸ்தீரணமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. தவறான சொத்தை பொறுத்து பரிகாரம் கேட்க முடியாது என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.